**தலைப்பு 296 - இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டு திணைக்களம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டு திணைக்களத்தின் 2021 திசெம்பர் 31 இல் நிதிச் செயலாற்றல் கூற்று காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11 (1) ஆம் பிரிவின் பிரகாரம் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டு திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2022 மே 31 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11 (2) ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சின் வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2022 யூன் 30 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக் கூற்றுக்கள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டு திணைக்களத்தின் நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேறகொண்டேன் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்கவும் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16 (1) ஆம் பிரிவின் பிரகாரம் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டு திணைக்களத்தினால் வருடாந்த மற்றும்

உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய வகையில் தமது வருமானங்கள் செலவினங்கள் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளைப் பேணுதல் வேண்டும்.
தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 (1) (இ) உபபிரிவின் பிரகாரம் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டு திணைக்களத்தின் நிதிக்கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை ஒன்று தயாரித்து பேணப்படுகிறது என்பதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டி இருந்ததுடன் இம் முறைமையின் செயற்றிறன் தொடர்பாக காலத்திற்குக்காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்குத் தேவையான மாற்றங்கள் செய்யப்படல்வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரிள் பொறுப்பு

……………………………………………………………………………………………………………

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிரழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தல் ஒன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவதே எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர்மட்டத்திலான உறுதிப்படுத்தல் ஒன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தல் ஒன்றல்ல மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக் கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் தொடர்பாக ஏற்படும் தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.
இலங்கைக் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒருபகுதியாக என்னால் தொழில்சார் தீர்ப்புக்கள் மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டு விடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.
- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.
- கணக்கீட்டு கொள்கையின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.
- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணபட்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு தெரியப்பத்தப்பட்டது.

## 1.5 ஏனைய சட்ட தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

………………………………………………………………..……

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6 (1) (ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

(அ) இந் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளன.

(ஆ) முனக்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட சிபாரிசுகள் அமுல்ப்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

……………………………………………………

### 1.6.1 வைப்புக்கள்

…………………

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| ……………………………… | ……………………………………… | ………………… |
| 6000.0-0-18-127 ஆம் இலக்க வைப்பின் நியதிச் சட்ட கொடுப்பனவுகளுக்கான தற்காலிக நிறுத்திவைத்தல் கணக்கின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதியானது திணைக்கள ஏடுகளின் பிரகாரம் ரூபா 3,000,000 ஆக இருந்த போதிலும் அது திறைசேரி ஏடுகளின் பிரகாரம் ரூபா 2,995,025 ஆக இருந்ததனால் ரூபா 4,975 வித்தியாசம் அவதானிக்கப்பட்டதுடன் அந்த வித்தியாசத்திற்கான காரணம் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. | இந்த வித்தியாசமானது வருமானத்திற்கு கணக்குவைக்கப்பட்ட ரூபா 4,975 பெறுமதியுடனான நாட்குறிப்பு பதிவு மாதாந்த கணக்கு பொழிப்பின் மூலமும் பொதுத் திறைசேரியின் மூலமும் இரண்டு தடவைகள் கொடுப்பனவாக பதிவு செய்யப்பட்டதன் காரணமாக இடம் பெற்றிருந்தது. இதனை பொதுத்திறைசேரி 2022 ஆம் ஆண்டு மார்ச் மாதம் சரி செய்திருந்தது. | வித்தியாசத்திற்கான காரணம் நிதிக்கூற்றுக்களில் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். |

### 1.6.2 காசுப்பாய்ச்சல் கூற்று

………………………………

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| ……………………………… | …………………………………… | ……………… |
| (அ) அரசாங்க கணக்குகள் திணைக்களத்தின் 2021 நவம்பர் 26 ஆந் திகதிய 2021/03 ஆம் இலக்க அரசாங்க கணக்குககள் வழிகாட்டிக் கோவையின் 7.6 ஆம் பந்தியின் பிரகாரம் காசுப்பாய்ச்சல் கூற்றினைத் தயாரிக்கும் போது | முற்பணக் கணக்கின் குறுக்குப் பதிவு பெறுவனவுகளும் கொடுப்பனவுகளும் கட்டுநிதி கணக்கிணக்க கூற்றில் செம்மையாக்கல் பதிவாக சுட்டிக்காட்டப்படுவதனால் | சுற்றறிக்கையின் பிரகாரம் காசுப் பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | காசு மற்றும் குறுக்குப் பதிவு ஆகிய இரண்டினையும் கருத்தில்கொள்ள வேண்டிய போதிலும் குறுக்குப் பதிவின் மூலம் முற்பணங்களை அறவீடு செய்தல்கள் ரூபா 3,806,409 தொகையும் முற்பணங்களை தீர்த்துவைத்தல் ரூபா 5,469,414 தொகையும் காசுப்பாய்ச்சல் கூற்றில் காட்டப்பட்டிருக்காமையால் செயற்பாட்டு நடவடிக்கைகளால் தோன்றிய தேறிய காசுப் பாய்ச்சல் ரூபா 1,663,005 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | மற்றும் செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து தோன்றிய காசுப்பாய்ச்சல் மூலதனச் செலவுகள் முழுவதற்கும் சமனானதாக இருக்க வேண்டும் என்பதனால் முற்பணக் கணக்கின் குறுக்குப் பதிவு பெறுவனவுகளும் கொடுப்பனவுகளும் காசுப்பாய்ச்சல் கூற்றில் பதியப்பட்டிருக்கவில்லை. | |
| (ஆ) | குாசுப்பாய்ச்சல் கூற்றில் செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து தோன்றிய தேறிய காசுப்பாய்ச்சலில் வைப்புக் கொடுப்பனவுகளின் பெறுமதி ரூபா 3,058,700 ஆக இருந்த போதிலும் திறைசேரி ஏடுகளின் பிரகாரம் அந்த மீதி ரூபா 3,063,675 ஆக இருந்ததனால் ரூபா 4,975 வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. | CIGAS நிகழ்ச்சித் திட்டத்தில் வைப்புக் கணகக்கின் மேற்கூறிய நாட்குறிப்பு பதிவு சரியாக உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் அந்த சரியான வைப்புக் கொடுப்பனவின் பெறுமதி காசுப்பாய்ச்சல் கூற்றில் உள்ளடக்கப்பட்டுள்ளது. | வித்தியாசத்திற்கான காரணம் நிதிக்கூற்றுக்களில் காட்டப்படுதல் வேண்டும். |

### 1.6.3 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | **பிணைப்பதிவேடு**<br>நிதிப்பிரமாணம் 891(1) இன் பிரகாரம் பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்களின் பெயர்களை உள்ளடக்கிய ஒரு பதிவேடு அகர வரிசைப்படி தயாரிக்கப்பட்டு பேணவேண்டிய போதிலும் திணைக்களத்தில் பிணைவைக்க வேண்டிய 13 உத்தியோகத்தர்கள் இருந்தும் அவ்வாறான பதிவேட்டினை நாளது வரையாகப் பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஒரு பிணை பதிவேடு தொடங்கப்பட்டுள்ளதுடன் பிணைப் பணத்தை அறவீடு செய்வதற்காக அரசாங்க நிதித் திணைக்களத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பப் பத்திரங்களுக்கு மத்தியில் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்ட கட்டுப்பாட்டாளர் நாயகத்தின் விண்ணப்பப்பத்திரம் தொடர்பாக கட்டுப்பாட்டாளர் நாயகம் பிணைவைத்துள்ளார் இன்னும் பிணைகள் வைக்கவேண்டிய உத்தியோகத்தர்கள் | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | இனங்காணப்பட்டுள்ளதுடன் அதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | |
| (ஆ) வாகன சம்பவக் குறிப்பு புத்தகம் ......................................... | | |
| நிதிப்பிரமாணம் 1645 (அ) இல் காட்டப்பட்டுள்ள ஒழுங்கு விதிகளின் பிரகாரம் வாகன சம்பவ குறிப்பு புத்தகம் அனைத்து வாகனங்கள் சம்பந்தமாகவும் நாளது வரையாக பேணப்படவேண்டிய போதிலும் திணைக்கள வாகனத் தொடர் தொடர்பான சம்பவக் குறிப்பு புத்தகங்கள் வாகனங்கள் தொடர்பான விபரங்களில் உள்ளடக்கப்பட வேண்டிய விடயங்கள் முறைப்படியாக பூரணப்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | வாகன சம்பவக் குறிப்பு புத்தகங்களை நாளதுவரையாகப் பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

.........................

**2.1 வருமான முகாமைத்துவம்**

...............................................

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|
| ...................................... | ........................................... | ..................... |
| மீளாய்வாண்டின் போது வருமானக் குறியீடு இல 1001-0-3-0-0-0 இல் அனுமதிப்பத்திர வருமானத்திற்கான தொடக்க மதிப்பீடு ரூபா 1,450,000 ஆக இருந்ததுடன் திருத்திய மதிப்பீடு ரூபா 2,800,000 ஆக இருந்ததனால் ரூபா 1,350,000 தொகையான முரண்பாடு அவதானிக்கப்பட்டதுடன் அது தொடக்க மதிப்பீட்டின் 93 சதவீத முரண்பாடாகும். | 2020 ஆம் ஆண்டில் வருமான மதிப்பீட்டினைத் தயாரிக்கும் சந்தர்ப்பத்தின் பின்னர் கட்டுப்பாட்டிற்கு உட்படுத்தப்பட்ட பொருள் விடயங்களின் எண்ணிக்கை அதிகரித்ததன் காரணமாக திணைக்கள வருமானத்திற்கு ஏற்பட்டுள்ள தாக்கத்தினை மீளாய்வு செய்து ஆண்டின் நடுப்பகுதியில் வருமான மதிப்பீட்டினை திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நடைமுறைச் சாத்திய அடிப்படையில் மதிப்பீடுகள் தயாரிக்கப்படுதல் வேண்டும். |

## 2.2 செலவு முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் போது 04 மூலதன செலவு விடயங்களுக்கான தேறிய நிதி ஏற்பாட்டில் 6 சதவீதத்திலிருந்து 100 சதவீதம் வரையான வீச்சுடைய நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டமை அவதானிக்கப்பட்டது. | உங்களின் அவதானிப்புக்களுடன் இனங்கிக்கொள்கிறேன். | நடைமுறைச் சாத்திய அடிப்படையில் மதிப்பீடுகள் தயாரிக்கப்படுதல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் போது 09 மீண்டுவரும் செலவு விடயங்களின் தொடக்க மதிப்பீட்டிற்கும் திருத்திய செலவு மதிப்பீட்டிற்குமிடையே 16 சதவீதத்திலிருந்து 76 சதவீதம் வரையான வீச்சுடைய முரண்கள் அவதானிக்கப்பட்டன. | 2020 ஆம் ஆண்டிற்கான செலவு மதிப்பீட்டினைத் தயாரிக்கும் சந்தர்ப்பத்தின் பின்னர் திணைக்கள கட்டுப்பாட்டினை மீறி இடம்பெற்ற பல்வேறு காரணங்களால் ஒவ்வொரு செலவு விடயத்தின் கீழும் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாடு திருத்தப்பட்டது. | தொடக்க மதிப்பீட்டினைத் தயாரிக்கும் போது கடந்த ஆண்டிற்கான செலவு தொடர்பாக மீளாய்வு செய்து முடியுமான அளவு சரியாக செலவு மதிப்பீட்டினை எதிர்வு கூறுதல் வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டின் போது 03 மூலதன செலவு விடயங்களின் தேறிய நிதி ஏற்பாட்டில் 38 சதவீதத்திலிருந்து 61 சதவீதம் வரையான வீச்சுடைய நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | உங்களின் அவதானிப்புக்களுடன் இணங்கிக் கொள்கிறேன். | நடைமுறைச் சாத்திய அடிப்படையில் மதிப்பீடு தயாரிக்கப்படுதல் வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டிற்கான இரண்டு மூலதன செலவு 66/69 வகைமாற்று நடைமுறையின் மூலம் மாற்றப்பட்டிருந்தது. அதன் காரணமாக அந்த இரண்டு செலவு விடயங்களின் தொடக்க மதிப்பீட்டிற்கும் திருத்தி மதிப்பீட்டிற்குமிடையேயான முரண்பாடு 65 சதவீதமும் 162 சதவீதமும் என்பது அவதானிக்கப்பட்டது. | 2020 ஆம் ஆண்டில் செலவு மதிப்பீட்டினைத் தயாரிக்கும் சந்தர்ப்பத்திற்குப் பின்னர் திணைக்களத்தின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட வகையில் இடம்பெற்ற பல்வேறு காரணங்களினால் ஒவ்வொரு செலவு விடயத்தின் கீழும் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாடானது திருத்தப்பட்டது. | -மேற்படி- |

2.3 **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்படவேண்டிய சான்றுபடுத்தல்கள்.**

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை தயாரிக்கப்பட்டு பேணப்படுகின்றது என்பதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன் அந்த முறைமையின் ஆக்கபூர்வதன்மை தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வு செய்து அதற்கிணங்க முறைமையினை ஆக்கபூர்வமாக மேற்கொள்வதற்குத் தேவையான மாற்றங்கள் செய்யப்பட வேண்டுமெனவும் அந்த மீளாய்வினை எழுத்து மூலமாக மேற்கொண்டு அதன் பிரதியை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதிலும் அவ்வாறான மீளாய்வு மேற்கொள்ளப்பட்டது என்பதற்கான கூற்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | பதவிநிலை உத்தியோகத்தர்கள் கூட்டத்தின் போது காணப்பட்ட உள்ளகக் கட்டுப்பாட்டு நடைமுறை தொடர்பாக அடிக்கடி கலந்துரையாடியதன் பின்னர் அதனை வலுப்படுத்துவதற்காக சந்தர்ப்பத்திற்கு ஏற்றவகையில் உள்ளக சுற்றறிக்கைகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் அவற்றின் பிரதியை அரசாங்க கணக்காய்வு பிரிவிற்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன் எதிர்காலத்தில் அதன் பிரதியை அரசாங்க கணக்காய்வு பிரிவிற்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | ஒழுங்குவிதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான இணக்க மின்மைகள்**

**பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன**

| **அவதானிப்புக்கள்** | | | |
|---|---|---|---|
| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
| (அ) **நியதிச் சட்ட ஒழுங்குவிதிகள்** | | | |
| 1987 யூன் 20 ஆந் திகதிய 1978 இன் 28 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தினால் திருத்தப்பட்ட 1969 | நியமத்திற்கு முரணாக இறக்குமதியை மேற்கொண்ட இறக்குமதியாளர்கள் வர்த்தமானியின் மூலம் வெளியிடப்படவேண்டிய | இதன் நிகழ்கால நிலைமையாவது தற்பொழுது இறுதியாக வரைவாக்கப்பட்டுள்ள இறக்குமதியாளர்களை கறுப்பு பட்டியலில் | உரிய இறக்குமதியாளர்களின் விபரங்களை வர்த்தமானியின் மூலம் வெளியீடு செய்யவேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | இன் 01 ஆம் இலக்க இறக்குதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டு அதிகாரச் சட்டத்தின் II E பிரிவு | போதிலும் திணைக்களத்தினால் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. | சேர்ப்பதற்குரிய (Black List) வர்த்தமானி அறிவித்தலானது சட்ட வரைபுத் திணைக்களத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர் உரிய வரைபுக்கு சில திருத்தங்களைச் செய்யுமாறு பிரேரிக்கப்பட்டுள்ளது. அத்திருத்தங்களை உள்ளடக்கி உரிய வர்த்தமானியை எதிர்காலத்தில் வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | |
| (ஆ) | அரசாங்க நிருவாக சுற்றறிக்கை ................................ | | | |
| | 2016 திசெம்பர் 29 ஆந் திகதிய 30/2016 ஆம் இலக்க அரசாங்க நிருவாக சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தி | ஒவ்வொரு எரிபொருள் பரீட்சிப்பிற்குப் பின்னர் 12 மாத கால எல்லையின் பின்னர் அல்லது 25,000 கிலோமீற்றர் தூரம் ஓடியதன் பின்னர் ஆகிய விடயங்களுக்கு மத்தியில் முதலாவதாக ஈடுபடுத்தப்படுகின்ற சந்தர்ப்பத்திற்குப் பின்னர் எரிபொருள் பரீட்சிக்கப்பட வேண்டிய போதிலும் திணைக்களத்தின் 07 வாகனங்களில் 06 வாகனங்களுக்காக அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. | தற்பொழுது இரண்டு வாகனங்களுக்காக எரிபொருள் பரீட்சிப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் மிகுதியாக உள்ள 05 வாகனங்களுக்காக விரைவாக எரிபொருள் பரீட்சிப்பினை மேற்கொள்வதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | சுற்றறிக்கையின் பிரகாரம் எரிபொருள் பரீட்சிப்பினை மேற்கொள்ளுதல் வேண்டும். |
| (இ) | நிதிப்பிரமாணம் ............................... | | | |
| | i. நி.பி 1647 (உ) | வாகனங்களுக்குப் பொறுப்பான உத்தியோகத்தர்களால் தமது பொறுப்பிலுள்ள மோட்டார் வாகனங்களின் வகை, வடிவம், பதிவு செய்த இலக்கம் மற்றும் அவை தொடர்பான தகவல்களை உள்ளடக்கிய மோட்டார் வாகன பட்டியல் பேணப்படவேண்டிய | இதன்பின்னர் இத்திணைக்களத்திற்குச் சொந்தமான வாகனங்கள் தொடர்பான விபரங்களை உள்ளடக்கிய மோட்டார் வாலகன பட்டியலைப் பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | போதிலும் அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| ii. நி.பி 1646 | வாகனங்களுக்குப் பொறுப்பான உத்தியோகத்தர்களால் அடுத்துவரும் மாதத்தின் 15 நாட்கள் கடப்பதற்கு முன்னர் 268(அ) படிவத்தில் எழுதப்பட்ட பயணங்கள் தொடர்பான மாதாந்த பொழிப்பின் முதல் பிரதியுடன் அந்த அந்த மாதத்தின் நாளாந்த ஓட்ட அட்டவணையை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்க வேண்டிய போதிலும் அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நாளாந்த ஓட்ட அட்டவணைகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தும் மாதாந்தம் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | -மேற்படி- |
| iii. நி.பி 371(2) (ஆ) | ஏதாவது விசேட செயற்பாடுகளுக்காக பதவி நிலையிலுள்ள உத்தியோகத்தர்களுக்கு மாத்திரம் வழங்கப்படுகின்ற ரூபா 100,000 உச்ச அளவு தொகையின் கீழ் குறித்த செயலுக்கான உபகட்டுநிதிகளானது உரிய விசேட செயற்பாடுகளுக்கு அண்மித்த திகதியில் உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்படவேண்டியதுடன் உத்தியோகத்தர்களால் அச்செயற்பாடு பூர்த்திசெய்யப்பட்ட உடன் கட்டுநிதியை தீர்த்துவைத்தல் வேண்டும். எவ்வாறாயினும், திணைக்களத்தின் 5 உத்தியோகத்தர்கள் பெற்றுக்கொண்ட ரூபா 2,500 இலிருந்து ரூபா 50,000 வரையான வீச்சுடைய முற்பணங்களின் பணத்தை தீர்த்துவைப்பதற்காக 32 நாட்களிலிருந்து 160 நாட்கள் வரையான காலம் எடுத்திருந்தது. | கொவிட் -19 தொற்றுநோய் நிலைமை ஏற்பட்டிருந்த போதிலும் திணைக்களத்தின் கடமைகளை தொடர்ச்சியாக பேணுவதற்கு சுழற்சி முறையில் உத்தியோகத்தர்கள் சேவைக்கு சமூகமளிக்க வேண்டி இருந்தது. எனவே கடமைகளை நிறைவேற்றும் போது சில தாமதங்கள் ஏற்பட்டுள்ளன. எதிர்காலத்தில் இவ்வாறான நிகழ்வுகள் இடம்பெறாமைக்கு உரிய உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | -மேற்படி- |
| iv. நி.நி. 756 (6) | வருடாந்த இப்பு மீளாய்வு | 05/2016 ஆம் இலக்க | -மேற்படி- |

| | |
|---|---|
| அறிக்கையானது அடுத்துவரும் நிதி ஆண்டின் மார்ச் 31 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பிவைக்க வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. | அரசாங்க நிதி சுற்றறிக்கையின் பிரகாரம் நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதிக்குள் பொருள் மீளாய்வுச் சபையை நியமித்து மீளாய்வு நடவடிக்கைகளை நிறைவேற்றுவதற்காக ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தும் அந்த உத்தியோகத்தர்களின் வேலைச் சுமைகளின் அடிப்படையில் இறுதி அறிக்கையினை வழங்குதல் தாமதமடைந்தது. |

**2.5 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| சேவையை விட்டுச் சென்றுள்ள முகாமைத்துவ உதவி உத்தியோகத்தரிடமிருந்து 04 ஆண்டுகளாக அறவிட வேண்டிய ரூபா 335,753 கடன் மீதியினை அறவிடுவதற்கு திணைக்களம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | வேலையிலிருந்து இடைநிறுத்தி வைக்கப்பட்ட ஆர்.டி.எம் ஜயவிக்ரம அவர்களுக்கு அரசாங்க நிருவாக மற்றும் இடர் முகாமைத்துவ அமைச்சினால் வழங்கப்பட்ட குற்றப் பத்திரிகை சம்பந்தமான ஒழுக்காற்று நடவடிக்கையை முடிவுறுத்தி அதன் பெறுபேறு இத்திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டிருக்கவில்லை. அப்பெறுபேற்றின் அடிப்படையில் மேலதிக நடவடிக்கைகளை எடுப்பதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. | நிலுவையான முற்பணங்களை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 தூரநோக்கும் செயற்பணியும்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 1969 சனவரி 16 ஆந் திகதிய 1969 இன் 01 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் | எங்கள் திணைக்களத்தின் தூரநோக்கு மற்றும் | இறக்குமதி மற்றும் ஏற்றுமதி |

ஏற்றுமதி கட்டுப்பாட்டுத் திணைக்களத்தை தோற்றுவிக்கும் குற்கோள், தூரநோக்கு மற்றும் செயற்பணியின் பிரகாரம் இலங்கையின் பொருளாதாரத்திற்கு பாதகமான தாக்கத்தை விளைவிக்கின்ற இறக்குமதியாளர்களையும் ஏற்றுமதியாளர்களையும் கட்டுப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும். எனினும் தற்பொழுது ஒவ்வொரு விடயம் தொடர்பாக நிறுவனத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற வேண்டுதலினை மாத்திரம் அடிப்படையாகக் கொண்டு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. எனவே இத்திணைக்களத்தை தோற்றுவிக்கும் அடிப்படைக்குறிக்கோளினை நிறைவேற்றும் வகையில் நடவடிக்கை எடுப்பதற்காக ஏற்றுக்கொள்ளப்பட்ட விஞ்ஞான ரீதியான முறைமை அல்லது நடைமுறை இல்லை என்பது கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

செயற்பணிக்கூற்றின் மூலம் இலங்கையின் ஒட்டுமொத்த முறைமை சம்பந்தமாக பாதுகாத்தல் மற்றும் பேணிக்காத்தல் பிரதான குறிக்கோளாகும். இதன்போது ஒட்டுமொத்த முறைமைக்குள் தேசிய பொருளாதார சுற்றாடல், பொது மக்கள் சுகாதாரம் , பொது மக்கள் பாதுகாப்பு உள்ளடக்கப்படும். இதன் காரணமாக இத்திணைக்களத்திடமிருந்து இறக்குமதி அல்லது ஏற்றுமதி கட்டுப்பாட்டு உத்தரவுப்பத்திரத்தை வழங்குவதற்கு முன்னர் அவற்றிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட உத்தரவுப் பத்திரக் கட்டணங்கள் அல்லது மேலதிகக் கட்டணங்கள் மாத்திரமன்றி அந்த உத்தரவுப் பத்திரங்களை வழங்கும் போது மேலே குறிப்பிட்ட ஒட்டுமொத்த முறைமைக்கு நலன்கள் மற்றும் சமூக கிரயம் பற்றி கவனித்து வழங்கப்படுவதுடன் இறக்குமதி அல்லது ஏற்றுமதி செய்யப்படுகின்ற பொருட்கள் சம்பந்தமாக செயற்படுத்தப்படுகின்ற நியதிச்சட்ட ரீதியான நிறுவனங்களை ஸ்தாபித்திருக்குமாயிருந்தால் அந்த நிறுவனங்களின் சிபாரிசுகளை அடிப்படையாகக் கொண்டு உத்தரவுப் பத்திரங்கள் வழங்கப்படும். மேலும் இந்த திணைக்களம் சுங்கத் திணைக்களம் பயன்படுத்தப்படுகின்ற ஆசிக்குடா முறைமையின் மூலம் சுங்கத்திணைக்களத்துடன் தொடர்புபடுத்துவதற்கு தேவையான அடிப்படை

கட்டுப்பாட்டுத் திணைக்களத்தை தோற்றுவிக்கும் குறிக்கோள் தூரநோக்கு மற்றும் செயற்பணியின் பிரகாரம் பாதகமான இறக்குமதி மற்றும் ஏற்றுமதிகளைக் கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

| | | |
|---|---|---|
| | நடவடிக்கைகள் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் சில பொருட்கள் சுங்கத் திணைக்களத்திற்கு விடுவிக்கம் போது அந்த முறைமையினுாடாக இத்திணைக்களத்தின் அங்கீகாரம் தற்பொழுது வழங்கப்படுகின்றது. | |

**3.2 செயற்திட்டத்தை நிறைவேற்றுவதில் தாமதங்கள்**

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|
| இறக்குமதி ஏற்றுமதி கட்டுப்பாட்டு திணைக்களத்தினால் மென்பொருட்களை அபிவிருத்தி செய்வதற்காக அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களுடன் மென்பொருள் முறைமையை தொடர்புபடுத்தல், இணைய வழிப்படுத்தல், இணைய வழிப்படுத்திய விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல் ஆகிய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக ICTA நிறுவனத்துடன் 2017 பெப்ரவரி 03 ஆந் திகதி புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்ததுடன் அதற்கிணங்க நிதியை வழங்குதல் ICTA நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்தது. எனினும் இதற்காக ஒதுக்கீட்டு அதிகாரச் சட்டத்திலிருந்தும் 2017 ஆம் ஆண்டிலிருந்து 2020 ஆம் ஆண்டுவரை ரூபா 9,080,000 தொகை பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. | இத்திணைக்களம் ICAT நிறுவனத்துடன் 2017-02-09 ஆந் திகதி கையொப்பமிடப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையின் மூலம் திணைக்களத்திற்காக இணைய தளமாக்கிய உத்தரவுப் பத்திரத்தினை வழங்கும் நிகழ்ச்சித்திட்டத்தை தயாரிப்பதற்காக இணங்கிக் கொள்ளப்பட்டிருந்தது. அதற்கிணங்க இந்நிகழ்ச்சித் திட்டத்தை தயாரிப்பதற்காக தேவையான நிதி ஏற்பாட்டினை நேரடியாக ICTA நிறுவனத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க ICTA நிறுவனத்தினால் தெரிவு செய்யப்பட்ட ஒரு நிறுவனத்தின் மூலம் கணனி நிகழ்ச்சித்திட்டத்தினை தயாரித்து அதன் முதலாவது கட்டத்தை ஆரம்பிப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. எனினும் இக்கட்டமானது திணைக்களத்திற்கு திருப்தியளிக்கும் மட்டத்தில் காணப்படாததன் அடிப்படையில் அதனை சரிசெய்யுமாறு எழுத்து மூலமும் நடாத்தப்பட்ட கூட்டங்களின் மூலமும் ICTA நிறுவனத்திற்கு தெரியப்படுத்தப்பட்டிருந்தும் அதற்காக எதிர்பார்க்கப்பட்ட பெறுபேறுகளைப் பெற்றுக்கொள்வதற்கு முடியாதிருந்தது. | திட்டமிட்டவாறு நிர்ணயிக்கப்பட்ட திகதியில் செயற்பாட்டினை நிறைவேற்றுவதற்கு செயற்திறனாக தலையிட்டு செயற்திட்டத்தை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

எனவே இத்திணைக்களத்தினால் திணைக்களத்தில் காணப்பட்ட உள்ளகக் கணனி முறைமைக்கு தேவையான மேம்படுத்தல்களைச் செய்து பயன்படுத்துகின்ற மக்களுக்கு இணைய வழியினூடாக பதிவுசெய்து கொள்வதற்கும், விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பதற்கும், கொடுப்பனவு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும், வரவுப்பத்திரத்தினை பெற்றுக்கொள்வதற்கும் முடியுமான வகையில் செயற்பாட்டுச் சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. காட்டப்பட்டுள்ள ரூபா 8,119,035 பெறுமதி செலவு செய்யப்பட்டதானது உள்ளகக் கணனி முறைமையினை திணைக்களத்திற்குள் அமுல்ப்படுத்தக்கூடிய வகையில் திணைக்களத்தின் மின்சார சுற்றுவழி முறைமையை திருத்தம் செய்தல், தரவுகளை அனுப்பும் வயர் முறைமையை ஸ்தாபித்தல், மின்சாரம் வழங்கும் அலகினை கொள்வனவு செய்தல், மென்பொருளை நாளதுவரையாக்குதல், திணைக்களத்தில் அப்போது காணப்பட்ட கணனி முறைமையை இணைய வழி முறைமையினூடாக அமுல்ப்படுத்தக்கூடிய வகையில் மேம்படுத்தல் என்பவற்றிற்காகும். ICTA நிறுவனத்தின் தலையீட்டுடன் உருவாக்குவதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்த இணைய வழிப்படுத்திய கணனி நிகழ்ச்சித்திட்டத்திற்காக இச்செலவு மேற்கொள்ளப்படவில்லை.

**3.3 முகாமைத்துவ பலவீனங்கள்**

**...............................................**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் | சிபாரிசுகள் |
|---|---|---|

| | அவதானிப்புக்கள் | கருத்துரைகள் | |
|---|---|---|---|
| | …………………………… | ……………………………… | ………………… |
| **(அ)** | இறக்குமதிகளை மட்டுப்படுத்த வேண்டிய மற்றும் தடை செய்யப்படவேண்டிய பொருட்களின் இறக்குமதிகளிலிருந்து தவிர்ந்து கொள்வதற்கான ஒழுங்குவிதிகளை உள்ளடக்கி 2044/40 ஆம் இலக்க 2017 நவம்பர் 09 ஆந் திகதிய வர்த்தமானியின் மூலம் மற்றும் பழைய வாகனங்கள் நாட்டிற்குள் வருவதனை மட்டுப்படுத்துவதற்காக 2016 யூன் 14 ஆந் தியதிய 1971/10 ஆம் இலக்க வர்த்தமானியின் மூலம் சட்டவிரோத இறக்குமதிகள் நாட்டிற்குள் வருவது தவிர்க்கப்பட்டிருந்தது. எனினும் சுங்கத் திணைக்களத்திற்கு மத்தியில் உள்ளக இணைப்பு இல்லாமை மற்றும் திணைக்களத்தின் கட்டுப்பாட்டு முறைமையில் காணப்பட்ட பலவீனங்களின் காரணமாக இறக்குமதி அனுமதிப் பத்திரத்தினை வழங்கியதன் பின்னர் அது தொடர்பான பின்தொடர் நடவடிக்கை எடுக்கும் நடைமுறை திணைக்களத்திடம் காணப்படவில்லை. | இது தொடர்பான உத்தியோகபூர்வமான கலந்துரையாடலுக்காக நிதி அமைச்சின் வியாபார சுங்கத் தீர்வை கொள்கை திணைக்களத்தின் தலைமையில் மற்றும் பிரதி திறைசேரி செயலாளரின் தலைமைத்துவத்தில் இலங்கை சுங்கத்தினதும் எங்கள் திணைக்களத்தினதும் பங்குபற்றுதலுடன் 2022 ஏப்ரல் 18 ஆந் திகதி நிதி அமைச்சில் நடைபெற்றது. அதன்போது இலங்கை சுங்கத்திற்கும் இறக்குமதி ஏற்றுமதி கட்டுப்பாட்டுத் திணைக்களத்திற்குமிடையே முறைப்படியான மற்றும் ஒழுங்கு முறையான உள்ளக கணக்காய்வு கட்டியெழுப்பப்பட வேண்டும் என தீர்மானிக்கப்பட்டது. விசேடமாக ஏற்றுக்கொள்ள ளப்பட்ட இலக்கிடப்பட்ட நடைமுறையினூடாக இணைப்பினைப் பேண வேண்டுமென தீர்மானிக்கப்பட்டது. | உத்தரவுப் பத்திரம் வழங்கியதன் பின்னர் அதுதொடர்பாக பின்தொடர் நடவடிக்கை எடுக்கும் நடைமுறை தோற்றுவிக்கப்படுதல் வேண்டும். |
| (ஆ) | தேசிய பொருளாதாரத்தின் வெளிநாட்டு நாணயத்தை நாட்டிற்குள் வைத்திருப்பதற்காக சில பொருட்களின் இறக்குமதிக்காக மட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருந்ததுடன் அது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | | |
| | i. திணைக்களத்தின் ‘‘கொவிட் 19’’ என்ற பெயரில் ஒரு பிரிவினைத் தோற்றுவித்து இறக்குமதிகள் | கொவிட் 19 பிரிவினால் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்ட பொருட்களை இறக்குமதி செய்வதற்காக | வர்த்தமானியின் மூலம் விதிக்கப்பட்டுள்ள ஒழுங்கு விதிகள் அந்த முறையிலேயே அமுல்ப்படுத்தப்படுதல் |

| | | | |
|---|---|---|---|
| | தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்ட பொருட்களை இறக்குமதி செய்வதற்காக இறக்குமதியாளர்களுக்கு விசேட அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. எனினும் ஆண்டின் போது சேகரிக்கப்பட்ட அனுமதிப்பத்திரங்களின் பட்டியல் திணைக்களத்தின் அப்பிரிவிடம் இல்லாமையினால் தற்காலிகமாக இறக்குமதியைத் தடைசெய்த பொருட்களின் எந்த அளவிற்கு அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டிருந்தது என்பதனை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு சான்றுகள் கிடைத்திருக்கவில்லை. | இறக்குமதியாளர்களால் வழங்கப்பட்ட வேண்டுதல்கள் திகதி ஒழுங்கின்படி பதிவேட்டில் ஒழுங்குமுறைப்படி பதியப்பட்டுள்ளன. அப்பதிவேட்டின் பிரகாரம் உரிய ஒவ்வொரு திகதிக்கான கோவைகள் பேணப்பட்டுள்ளன. அங்கீகரிக்கப்பட்டமை அல்லது அங்கீகரிக்கப்படாமை தொடர்பாக பதிவேட்டில் இறக்குமதியாளரின் முன்னிலையிலேயே குறிப்பிடப்பட்டுள்ளது. இப்பதிவேடு ஆரம்ப காலத்தில் கணனி மயப்படுத்தப்பட்டிருக்காத போதிலும் தற்பொழுது கணனிமயப்படுத்தப்பட்டு அமுல்ப்படுத்தப்படுவதுடன் வழங்கப்பட்டுள்ள அங்கீகாரத்தின் அளவு எவ்வளவு என்பதனை அவதானித்துக்கொள்ளலாம். | வேண்டும். |
| ii. | பூரணப்படுத்தப்படாத விண்ணப்பப் பத்திரங்களுக்காகவும் அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டிருந்ததுடன் உரியவிண்ணப்பப் பத்திரங்கள் முறைப்படியாக கோவை செய்யப்பட்டிருக்கவும் இல்லை. | அங்கீகாரத்தினை வழங்குவதற்கு போதியளவு விடயங்கள் மாத்திரம் விண்ணப்பப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டிருக்குமாயிருந்தால் உரிய அங்கீகாரத்தினை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் தொடக்க காலத்தில் காணப்பட்ட வேலைப்பழுவின் அடிப்படையில் அவ்வாறு இருந்த போதிலும் தற்பொழுது முறைப்படியாக அச்செயற்பாட்டை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என தயவாகத் தெரிவிக்கிறேன். | -மேற்படி- |
| iii. | 2021 யூன் 21 ஆந் திகதிய 2231/18 ஆம் இலக்க வர்த்தமானியின் 8 ஆம் பந்தியில் குறிப்பிட்ட கட்டுப்பாட்டினை மீறி பொருட்கள் இறக்குமதி | 2021 யூன் 11 ஆந் திகதி வெளியிடப்பட்ட 2231/18 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் மூலம் அதன் உபபட்டோலை இலக்கம் (1) இன் மூலம் காட்டப்பட்டுள்ள நிர்ணயிக்கப்பட்ட | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | செய்த சந்தர்ப்பங்கள் காணப்பட்டதனைப் போல இறக்குமதிகள் மட்டுப்படுத்தப்பட்டிருந்த கடந்த 05 ஆண்டுகளுடன் ஒப்பீடு செய்த போது மீளாய்வாண்டில் வழங்கப்பட்ட இறக்குமதி அனுமதிப்பத்திரங்ளின் எண்ணிக்கை விரைவாக அதிகரித்துச் சென்றிருந்ததனால் இறக்குமதி அடிப்படையிலான தடைகளை விதிப்பதன் மூலம் எதிர்பார்க்கப்பட்ட பெறுபேறுகள் கிடைத்திருக்காத சந்தர்ப்பங்கள் காணப்பட்டது என்பது அவதானிக்கப்பட்டது. | பொருட்களை இலங்கைக்குள் இறக்குமதி செய்தல் தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்டுள்ளது. (Temporary Suspension) எனினும் சுங்கத் தீர்வையினை நிர்ணயிக்கும் குழுவின் அங்கீகாரத்தின் அடிப்படையில் விசேட சந்தர்ப்பங்களில் மற்றும் அத்தியவசியமான சந்தர்ப்பங்களில் பந்தி இலக்கம் 8 இல் குறிப்பிட்ட மேலே கூறப்பட்ட விடயங்களை இறக்குமதி செய்வதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. எனினும் உங்களால் குறிப்பிட்ட இறக்குமதி அனுமதிப் பத்திரமானது விசேட இறக்குமதி கட்டுப்பாட்டு அனுமதிப் பத்திரத்தின் கீழ் வழங்கப்பட்ட இறக்குமதி அனுமதிப்பத்திரமாக கருதப்படுதல் வேண்டும். | |
| (இ) | அரசாங்கத்திற்கச் சொந்தமான ஒரு பசளைக் கம்பனியால் 2021 ஒக்தோபர் மாதத்தின் போது அனுமதிப்பத்திரமின்றி இறக்குமதி செய்யப்பட்ட பசளை இருப்பிற்காக அறவீடு செய்யவேண்டியிருந்த மேலதிக கட்டணமாகிய ரூபா 86,907,433 தொகையான வருமானத்தை அறவீடு செய்யாமையால் அப்பெறுமதியால் திணைக்களத்தின் வருமானம் இழக்கப்பட்டிருந்தது. | இலங்கை பசளை நிறுவனத்தினால் இறக்குமதி செய்த பசளை இருப்பிற்கான அனுமதிப்பத்திர கட்டணத்திற்கு மேலதிகமாக அறவிடவேண்டிய (அனுமதிப் பத்திரம் இல்லாது இறக்குமதி செய்வதற்காக) மேலதிக கட்டணமாகிய ரூபா 86,907,433 பணம் இத்திணைக்களத்தினால் அறவிடப்பட்டிருக்குமாயிருந்தால் 50 கிலோகிராம் பசளை பேக்கானது அண்ணளவாக ரூபா 250 இனால் அதிகரித்திருக்கும். அப்பசளை இறக்குமதி செய்யப்பட்ட சந்தர்ப்பத்தில் நாட்டிற்குள் பசளை தட்டுப்பாடாக இருந்தமை மற்றும் பசளையின் விலை மிகவும் அதிகரித்திருந்தமையின் காரணமாக விவசாயிகள் முகங்கொடுத்திருந்த சிக்கல் நிலைமையினை குறித்த அளவுக்கேனும் கட்டுப்படுத்தும் | அனுமதிப்பத்திரம் வழங்கும் போதும் மேலதிகக் கட்டணத்தை அறவீடு செய்யும் போதும் சட்ட விதிகளுக்கு மாற்றமாக நடவடிக்கை எடுக்காதிருத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | நோக்கிலும் இப்பசளை இறக்குமதி செய்யும் கம்பனி அரசாங்கத்திற்கு சொந்தமாக இருந்தமை ஆகிய விடயங்களை கருத்தில் கொண்டு உரிய மேலதிக கட்டணத்தை மட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. | |
| (ஈ) | ஒரு கிலோகிராம் சீனிக்காக விதிக்கப்பட்ட விசேட பொருள் வரி ரூபா 50 இலிருந்து 25 சதம் வரையை குறைத்ததனால் எதிர்பார்க்கப்பட்ட நிவாரணத்தை பாவனையாளர்கள் பெற்றுக்கொள்வது தொடர்பாக ஆய்வு செய்வதற்கான விசேட கணக்காய்வின் போது பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன. | | |
| | i. இறக்குமதி செய்கின்ற சீனிக்காக உத்தரவுப் பத்திர முறையை அறிமுகப்படுத்தி 2020 ஒக்தோபர் 29 ஆந் திகதிய 2199/20 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியை வழங்குவதற்கு நிதி அமைச்சரினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தும் இதற்காக பின்பற்ற வேண்டிய நடைமுறை தொடர்பாக சில அறிவுறுத்தல்கள் நிதி அமைச்சினால் வழங்கப்பட்டது என்பது அவதானிக்கப்படவில்லை. அதற்கிணங்க சீனி இறக்குமதியை கட்டுப்படுத்துவதற்குத் தேவையான வரையறைகளை அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்காமையின் | சீனி இறக்குமதியை ஒழுங்குபடுத்துவதற்காக உத்தேச நடைமுறையை தயாரித்து தருமாறு உரிய அமைச்சிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டிருந்ததுடன் அதற்காக பொருத்தமான நடைமுறையை திணைக்களத்திற்கு உரிய நிறுவனத்தின் மூலம் பிரேரிக்கப்பட்டிருக்காததனால் சீனிக்காக அனுமதிப்பத்திரத்தினை வழங்குதல் 2020-11-18 ஆந் திகதியிலிருந்து ஆரம்பிக்கப்பட்டது. அதற்கிணங்க சீனி இறக்குமதிக்காக அனுமதிப்பத்திரத்தை வழங்கும் போது ஒழுங்குபடுத்துவதற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட பிரதான விடயமாவது 180 நாட்கள் கடன் அடிப்படையில் சீனியை இறக்குமதி செய்யும் இயலுமையாகும். அவ்வாறு கடனை அடிப்படயாகக் | வர்த்தமானியின் மூலம் விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகளை அரசாங்கம் எதிர்பார்த்தவாறு நிறைவேற்றுவதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

காரணமாக சீனி இறக்குமதிக்காக விண்ணப்பப் பத்திரங்களை சமர்ப்பித்த அனைத்து விண்ணப்பதாரர்களுக்கும் அவர்கள் இறக்குமதி செய்வதற்கு வேண்டிக் கொண்ட அனைத்து இருப்புக்களையும் இறக்குமதி செய்வதற்கு இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டாளரினால் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க இவ்வாறு இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டுத் திணைக்களத்தினால் தனது தொழில்சார் பொறுப்பினை கணித்து நிறைவேற்றாமையின் காரணமாக இறக்குமதி அனுமதிப் பத்திரத்தினை அறிமுகப்படுத்தியதன் மூலம் இறக்குமதியை கட்டுப்படுத்துதல் அல்லது வெளிநாட்டு நாணயம் வெளிச்செல்வதனைக் கட்டுப்படுத்தும் அரசாஙகத்தின் எதிர்பார்ப்புக்கள் எதிர்பாரத்தவாறு நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

கொண்டு இறக்குமதி செய்வதற்கு முடியாத இறக்குமதியாளருக்கு சினிக்காக அனுமதிப்பத்திரம் வழங்கப்படாததுடன் எனவே கடன் அடிப்படையில் இறக்குமதி செய்யக்கூடிய இறக்குமதியாளர்கள் மாத்திரம் அனுமதிப்பத்திரத்திற்கு வேண்டுகோள் விடுத்திருந்தனர். இதனூடாக அப்போது தொடக்க குறிக்கோளாகக் காணப்பட்ட வெளிநாட்டு நாணயம் செல்வதனைக் கட்டுப்படுத்தும் அரசாங்கத்தின் எதிர்பார்ப்பு திணைக்களத்தினால் நிறைவேற்றப்பட்டிருந்தது.

மேற்கூறிய விடயத்திற்கு மேலதிகமாக உள்நாட்டு சிகப்பு சீனி உற்பத்தியானது உள்நாட்டு பயன்பாட்டு தேவைக்கு போதுமானது என கரும்பு, சோளம், மரமுந்திரிகை, மிளகு, கருவா, கராம்பு, வெற்றிலை என்பவற்றை உள்ளடக்கிய சிறு தோட்ட பயிர்செய்கையை அபிவிருத்தி செய்தல் சார்ந்த கைத்தொழில் மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டு இராஜாங்க அமைச்சு இனங்கண்டு வேண்டுகோள்விடுத்திருந்ததனால் 2021-02-21 ஆந் திகதியிலிருந்து சிகப்பு சீனிக்காக இறக்குமதி கட்டுப்பாட்டு அனுமதிப்பத்திரத்தினை வழங்குதல் நிறுத்திவைக்கப்பட்டுள்ளது. அதன்மூலம் உள்நாட்டு சீனிக் கைத்தொழிலாளர்களை பாதுகாத்தல் மற்றும் வெளிநாட்டு நாணயம் நாட்டிலிருந்து வெளிச்செல்வதனை குறைத்தல் எதிர்பார்க்கப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| ii. | சீனி இறக்குமதிக்கான அனுமதிப்பத்திர முறைமையானது 2020 ஒக்தோபர் 30 ஆந் திகதியிலிருந்து அமுல்ப்படுத்தப்பட்டிருந்தும் அனுமதிப்பத்திரத்தினை வழங்குதல் 2020 நவம்பர் 18 ஆந் திகதி வரை தாமதித்து அமுல்ப்படுத்தப்பட்டிருந்தது அதற்கிணங்க அனுமதிப்பத்திர முறைமை அறிமுகப்படுத்தப்பட்டதன் பின்னர் அனுமதிப்பத்திரத்தினை வழங்குதலினை தாமதித்த காலப்பகுதியில் 101,527 மெட்ரிக் தொன் சீனியை அனுமதிப் பத்திரம் இல்லாது இற்குமதி செய்வதற்கு 18 இறக்குமதியாளர்கள் நடவடிக்கை எடுத்திருந்தனர். | அவசர கொள்கை ரீதியான தீர்மானத்தின் அடிப்படையில் வர்த்தமானி வழங்கப்பட்டிருந்தும் சில இறக்குமதியாளர்கள் அப்போது நாணயக் கடிதத்தினை திறந்து பொருட்களுக்கு கட்டளையிட்டு அல்லது வழங்குனர்களிடமிருந்து உரிய பொருட்கள் துறைமுகத்திற்கு எடுத்தச் செல்லப்பட்டு இறக்குமதிச் செயற்பாடு ஆரம்பிக்கப்பட்டிரந்தது. எவ்வாறாயினும் எந்த ஒரு பொருளையும் இறக்குமதி அனுமதிப் பத்திர கட்டுப்பாட்டிற்கு உட்படுத்துகையில் அப்பொருட்களை கப்பலில் ஏற்றுவதற்கு முன்னர் அனுமதிப்பத்திரத்தினைப் பெற்றுக்கொள்ளல் எதிர்பார்க்கப்பட்டது. எனினும் அனுமதிப்பத்திரத்தினைப் பெற்றுக்கொள்ளாது இச்சீனி இருப்பினை விடுவிப்பதற்கு செல்லுபடியான இறக்குமதி கட்டுப்பாட்டு அனுமதிப்பத்திரத்தினை இலங்கை சுங்கத்திற்குச் சமர்ப்பித்தல் வேண்டும். அதற்கிணங்க இவ்வாறு அனுமதிப்பத்திரத்தினைப் பெற்றுக்கொள்ளாது இறக்குமதி செய்த சீனிக்காக அனுமதிப்பத்திரக் கட்டணமும் மேலதிகக் கட்டணமுமம் அறவிட்டு சுங்கத்திடமிருந்து விடுவிக்கப்பட்டிருந்தது. | -மேற்படி- |
| iii. | 2016 பெப்ரவரி 11 ஆந் திகதிய 1953/28 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் பிரகாரம் அனுமதிப்பத்திரம் இல்லாது இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களுக்காக விலைகாப்புறுதி கப்பல் கட்டண பெறுமதியில் 05 | 2016-02-11 ஆந் திகதிய 1953/28 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் III ஆம் பட்டோலையின் பிரகாரம் மேலதிகக் கட்டணமானது விலை காப்புறுதி கப்பல் கட்டண பெறுமதியில் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவகையில் பொருட்கள் கப்பலில் ஏற்றப்பட்ட ஆனால் | -மேற்படி- |

சதவீதமான மேலதிகக் கட்டணத்தை அறவீடு செய்ய வேண்டிய போதிலும் இறக்குமதி அனுமதிப்பத்திரம் இல்லாது இறக்குமதி செய்யப்பட்ட சீனி இருப்புக்களின் விலை காப்புறுதி கப்பல் இருப்புக்களின் கட்டண பெறுமதியில் 2 சதவீதம் மாத்திரம் அறவீடு செய்வதற்கு இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) நாயகத்தினால் தீர்மானிக்கப்பட்டிருந்தது. அவ்வாறு தண்டப்பணத்தை குறைத்து இறக்குமதி செய்வதற்காக இறக்குமதி ஏற்றுமதி திணைக்களத்திற்கு அதிகாரம் உள்ளது என்பது அவதானிக்கப்படாததுடன் அனுமதிப்பத்திரம் இல்லாது இறக்குமதி செய்யப்பட்ட 294,085 மெட்ரிக் தொன் சீனிக்காக அவ்வாறு கட்டணத்தை குறைத்ததன் காரணமாக அரசாங்கத்தினால் அறவிடவேண்டிய ரூபா 433,523,216 தொகையான பணம் இழக்கப்பட்டிருந்தது.

பொருட்கள் துறைமுகத்தை அடைவதற்கு முன்னர் இறக்குமதி கட்டுப்பாட்டு அனுமதிபத்திரத்தினைப் பெற்றுக்கொள்கையில் 4% ஆக மற்றும் பொருட்கள் துறைமுகத்தை அடைந்ததன் பின்னர் இறக்குமதி கட்டுப்பாட்டு அனுமதிப் பத்திரத்தை பெற்றுக்கொள்கையில் 5% ஆக மேலதிகக் கட்டணம் அறவிடப்பட வேண்டும். மேலும் 2016-02-11 ஆந் திகதிய 1953/28 ஆம் இலக்க பிரமாணங்களின் மூலம் பின்வருமாறு கட்டுப்பாட்டாளர் நாயகத்திற்கு கட்டணம் சம்பந்தமான அதிகாரம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

“இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டு அனுமதிப்பத்திரக் கட்டணம் மற்றும் மேலதிகக் கட்டணத்தை தேவைக்கு ஏற்றவாறு திருத்தம் செய்யும் அதிகாரம் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டாளர் நாயகத்திற்கு உள்ளது.”

அதற்கிணங்க மேலே குறிப்பிடப்பட்ட வர்த்தமானியின் அதிகாரத்தின் பிரகாரம் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டாளர் நாயகத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும் சட்டரீதியான அடிப்படையில் தோற்றுவித்து இது மேற்கொள்ளப்பட்டது எனவும் தெரிவிக்கிறேன்.

குறைக்கப்பட்டுள்ள மேலதிக கட்டண பணமாக ரூபா 433,120,147 காட்டப்பட்டிருந்த போதிலும் திணைக்களத்திடம் உள்ள தகவல்களின் பிரகாரம் கழிக்கப்பட்டது ரூபா 37,039,589.42 மாத்திரமாகும். இந்த நிவாரணம் வழங்கப்பட்டது. 2020-10-30 ஆந் திகதியிலிருந்து 2020-11-18 ஆந் திகதி வரை

| | | | |
|---|---|---|---|
| | | அதாவது அனுமதிப்பத்திரம் வழங்கப்படாத காலப்பகுதியின் போது பொருட்களை ஏற்றிய இறக்குமதியாளர்களுக்கு மாத்திரமாகும். | |
| iv. | சீனிக்காக இறக்குமதி அனுமதிப்பத்தரம் வழங்கும் பிரதான குறிக்கோளாக அவதானிக்கப்பட்டதானது வரி குறைக்கப்பட்டதன் பின்னர் அதிக அளவான சீனியை இறக்குமதி செய்வதனை கட்டுப்படுத்துவதாகும். எனினும் அனுமதிப்பத்திரத்தினை வழங்குவதற்கு முன்னர் மாதாந்தம் சராசரியாக இறக்குமதி செய்யப்பட்ட அளவு 41,779 மெட்ரிக் தொன்களாக இருந்ததுடன் அனுமதிப்பத்திர முறைமையை அறிமுகப்படுத்தியதன் பின்னர் அது மாதாந்தம் 61,714 மெட்ரிக்தொன்களாக இருந்ததுடன் அது 47 சதவீதத்தினால் இறக்குமதியின் அளவில் அதிகரிப்பாகும். அதற்கிணங்க அனுமதிப்பத்திர முறைமையை அறிமுகப்படுத்தியதன் மூலம் எதிர்பார்த்த குறிக்கோள் நிறைவேற்றப்பட்டிருக்க வில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | இலங்கை சுங்கத்திடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட 2020 ஆம் ஆண்டிற்கான இறக்குமதி செய்யப்பட்ட சீனியின் தரவுகளின் பிரகாரம் மாதாந்தம் சீனி இறக்குமதி 58,385 மெட்ரிக்தொன் அளவிலானதாகும். எனினும் அனுமதிப்பத்திர முறைமை அறிமுகப்படுத்தியதன் பின்னர் அது 61,055 மெட்ரிக் தொன் அளவுடையாதாக இருந்தது. அது அண்ணளவாக 4.6% அளவான அதிகரிப்பாகும். | -மேற்படி- |